2011 பிப்ரவரி 10]

12. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஆ) பேரவையின் கண்ணியத்திற்குக் குந்தகம் விளைவித்த அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்களைக் கண்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று 10-2-2011 பேரவையில் அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் திரு. டி. ஜெயக்குமார், திரு. கோ. அரி, திரு. ஏ.கே. போஸ் ஆகியோர் அவையின் கண்ணியத்திற்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டதை கண்டிக்கும் வகையில் தீர்மானம். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இன்று 10-2-2011 இடைக்கால நிதிநிலை அறிக்கை மீதான பதிலுரையில் மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் உரையாற்றிக் கொண்டிருக்கும்போது திரு. டி. ஜெயக்குமார், திரு. கோ. அரி, திரு. ஏ.கே. போஸ் ஆகிய உறுப்பினர்கள் இடைக்கால நிதிநிலை அறிக்கையைக் கிழித்து அவையிலே வீசி எறிந்தார்கள். இத்தகைய செயல் பேரவை விதிகளுக்கு முரணானதாகவும், பேரவை இறையாண்மைக்கு எதிரானதாகவும், ஜனநாயக நெறிமுறைகளுக்கு மாறானதாகவும் உள்ளது என்பதால் இப்பேரவை இவர்களது செயலை வன்மையாகக் கண்டிக்கிறது. அவையின் உரிமை மீறலுக்கு உட்பட்ட செயலாக அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சார்ந்த இந்த மூன்று உறுப்பினர்களும் நடந்து கொண்டுள்ளனர். எனினும், இந்தப் பேரவை அவர்களைப் பெருந்தன்மையோடு மன்னிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.